Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC. 284/2023** |
| Deposition of witness for | :: | **PW. 7** |
| Name | :: | **உமாமாலினி (சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

**1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுசவின் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர்.**
**09.12.2025.**
**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தற்போது தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.04.2023 ம் தேதி மாலை 6.30 மணிக்கு அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரத்தை சார்ந்த சோலையப்பன் மகன் பரமேஷ்வரன் என்பவர் தனது பக்கத்து வீட்டுக்காரர்கள் தன்னை அசிங்கமாக பேசி தொந்தரவு செய்வதாக நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய மனு எண் 270/2023 பிரகாரம் மனு ரசிது வழங்கினேன். பின்னர் அன்றே மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர்களான லட்சுமி, சந்திரசேகர், முனியாண்டி, பால்குட்டி, அருண்குமார், ஆகியோர்களை விசாரணை செய்து பின்பு எதிர்மனுதாரர்கள் மனுதாரரிடம் நடந்த சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்ததின்பேரில் மேற்படி எதிர் மனுதாரர்களை எச்சரித்து மனு ரசீது முடிக்கப்பட்டது.

2. பின்னர் புகார்தாரர் பரமேஷ்வரன் மேற்படி எதிர்மனுதாரர் மீது

கடந்த 17.05.2023 ம் தேதி விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகார் மனுவினை பெற்று 15.09.2023 ம் தேதி புகார்தாரர் மற்றும் எதிர் மனுதாரர்களை 21.09.2023 ம் தேதி காலை ஆஜராக வேண்டி தபால் மூலம் சம்மன் அனுப்பினேன்.

3. பின்னர் 17.09.2023 ம் தேதி மனுதாரரின் காம்பவுண்ட் சுவரை சந்திரசேகர் என்பவர் உடைத்து சேதப்படுத்தியதாகவும் அதன்பிறகு 24.09.2023 ம் தேதி மனுதாரர் வீட்டின் முன்பு நிறுத்தியிருந்த தனது மோட்டார் சைக்கிளை அருண்குமார் என்பவர் கீழே தள்ளிவிட்டு உடைத்து சேதப்படுத்தியது சம்மந்தமாக அருப்புக்கோட்டை நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு நாகராஜபிரபு அவர்களால் நிலைய குற்ற எண் 236/2023 பிரிவுகள் 294(b), 427, 506(1) இதசவாக வழக்கு பதிவு செய்த விவரம் தெரிந்து மேற்படி வழக்கிற்காக நான் வழங்கிய அருப்புக்கோட்டை நகர் காவல் நிலைய மனு ரசிது எண் 270/2023 மற்றும் புகார்தாரர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்த மனு நகலையும், சார்பு ஆய்வாளர் நாகராஜபிரபு அவர்களிடம் ஒப்படைத்தேன். (**மனு ரசீது எண். 270/2023 ன் உண்மை நகல் அசாஆ.6 ஆகவும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்த 17.05.2023 ம் தேதிய மனுவின் உண்மை நகல் அசாஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**) இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வாரத காரணத்தினால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது**